UNIVERSITÄT BERN

Universitätsbibliothek Bern

பேர்ண் பல்கலைகழக நூலகம் (UB Bern) அனைத்து ஆர்வமுடைய மக்களுக்கும் அறிவியல்பூர்வமான ஒரு பொதுசன நூலகமாகும்.

நூல்கள் இரவல் பெறுதல்: நூலகத்தில் இருந்து நூல்களை கட்டணமின்றி இரவலாக எடுத்துச்செல்லலாம். இதற்கு நூலக அடையாள அட்டை தேவை. வேறொரு நூலகத்திலிருந்தும் உங்களுக்கு தேவையான நூல்கள் எடுத்துத் தரப்படும் போது கட்டணம் அறவிடப்படலாம். நூல்கள் நான்கு கிழமைக்குள் திருப்பி கொடுக்க வேண்டும். திருப்பிக்கொடுக்கும் காலம் வரும்போது உங்களுக்கு நினைவூட்ட நூலகத்திலிருந்து மின்னஞ்சல் செய்தி அனுப்புவார்கள்.

நூலக அடையாளஅட்டை: நூலக அடையாளஅட்டை கட்டணமின்றி பெறலாம். இதற்கு உங்களுடைய அடையாளஅட்டையும், நடைமுறையிலுள்ள மின்னஞ்சல் முகவரியும், அத்துடன் சுவிஸ் வதிவிட முகவரி (புலம் பெயர்ந்தோர் முகாம் உட்பட) உள்ளவர்களுக்கு இது இலகுவாகும். அகதி அந்தஸ்து பெற்றவர்களும் நூலக அடையாளஅட்டையை கட்டணமின்றி பெற்றுக்கொள்ளளாம். நூலக அடையாளஅட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு Switch-eduID யை உருவாக்க வேண்டும் (ஜேர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் முன் பதிவு செய்யலாம்). உங்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை ஜேர்மன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் (hier) இடத்தில் அழுத்தி பெற முடியும். பதிவின் பின் உங்களுக்கு மின்னஞ்சல் மூலம் பதிவு உறுதி செய்யப்பட்ட பதில் அனுப்பி வைக்கப்படும். பின்னர் நீங்கள் பல்கலைக்கழக நூலகத்துக்கு (UB Bern) சென்று நூலக அடையாளஅட்டையை நேரடியாகப் பெறலாம். நூலக அடையாளஅட்டையைப் பெற வரும் பொழுது உங்களுடைய அடையாளட்டை, மற்றும் உறுதி செய்யப்பட்ட மின்னஞ்சல் ஆகியவற்றையும் எடுத்து வரவும்.

நூல்கள்: பேர்ண் பல்கலைக்கழக நூலகத்தில் (UB Bern) அரபு, ஜெர்மன், போஸ்னியன்/குரோஷியன்/செர்பியன், பல்கேரியன், ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலியன், மாசிடோனியன், பாரசீகம், போர்த்துகீசியம், ஸ்லோவாக், ஸ்பானிஷ், ரஷியன், செக், துருக்கியம், ஹங்கேரியன், உக்ரைனியன், உருது, தமிழ் மற்றும் வேறு மொழிகளிலும் நூல்கள் உள்ளன.

இருக்கை வசதி: நூலகத்திற்குள் இருந்து நூல்களை கற்பதற்கு, வாசிப்பதற்கு இருக்கைகள் உள்ளன உங்களுக்கான இருக்கையை கண்டுபிடிக்க (hier) இதில் அழுத்தவும்.

பத்திரிகைகள்/சஞ்சிகைகள்: பேர்ண் பல்கலைக்கழக நூலகத்தில் நூலக அடையாளஅட்டையுடன் பொதுமக்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பதற்கு கணணி வசதி செய்யப்பட்டுள்ளது. நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் பேசப்படும் 60 மொழிகளில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சர்வதேச செய்தித்தாள்களும், சஞ்சிகைகளும் பொதுக் கணணியில் PressReader என்னும் இணையத்தளம் மூலம் வாசிக்கலாம்.

உதவியும் தகவலும்: நாங்கள் உங்களுக்கு தெரிந்த மொழியில் உரையாடி உதவி செய்வதற்கு மகிழ்சியுடன் காத்திருக்கின்றோம்.

தொலைபேசி இலக்கம்: +41316849211
மின் அஞ்சல் முகவரி: bibliothek@unibe.ch

ஜேர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளவும்.
வேறு மொழியில் தகவல் பெற விரும்பினால் மின் அஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.
நாங்கள் மீண்டும் உங்களுடன் தொடர்புகொள்வோம்.